[11th March 1966

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO DEATHS DUE TO CHOLERA IN NORTH ARCOT DISTRICT.

புலவர் கா. கோவிந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்ட சபை விதிகளின் 41-வது விதியின் கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு வட்டத்தில் குறிப்பாக அனக்காவூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் காலரா நோயினுல் இறப்புக்கள் ஏற்பட்டதும் அப்பகுதியில் இக்கொள்ளை நோய் மேலும் பரவிக்கொண்டிருப்பது மான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொது சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

THE HON. SRIMATHI **JOTHI VENCATACHELLUM:** Mr. Speaker, Sir, the Government understand that no case of cholera has been reported from Cheyyar taluk during the entire period of 1965. During 1966, only sporadic cases of cholera were seported from Vembakkam Panchayat Union.

During the month of February, five cases of cholera were reported from Vembakkam Panchayat Union. Out of the five attacks two proved fatal. From the Anakkavur Panchayat Union no cases have been reported either during the entire period of 1965 or during 1966 up-to-date. The number of inoculations done during 1966 in the infected areas is 2,906. The Public Health authorities are taking adequate preventive measures to arrest the spread of the epidemic. The staff position in the district is adequate to cope up with the situation.

The incidence of cholera in Cheyyar taluk in North Arcot District is as follows—

Name of the taluk.		Week ending.	Attacks.	Deaths.
Cheyyar	..	12—2—1966	1	..
Cheyyar	..	19—2—1966	4	2

III.—STATEMENT BY CHIEF MINISTER REGARDING LANGUAGE OF 'COMMANDS' IN N.C.C. TRAINING.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை, விதி 82-ன் கீழ் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன் —விளக்கம் அல்ல திருத்தம் என்று கூட சொல்லலாம். நான் கல்வி மான்யத்தின் மீது விடையளிக்கும் போது, என்.ஸி.ஸி. க்கு கமான்ட் கொடுப்பதைப்பற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதற்கு பதில் சொன்னேன், அதாவது கமான்ட் தமிழில் இருக்கும் என்று சொன்னேன். அது தவறு என்பதை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். கமான்ட் என்று சொல்வது, ரைட், லெப்ட் என்று சொல்வது, அதை தமிழில் சொல்ல வேண்டு மென்ருல், வலது, இடது என்று சொல்லவேண்டும். லெப்ட், ரைட் என்று சொன்னுல் எல்லோரும் புரிந்துகொள்வார்கள். இந்தியில் இருந்தாலும் அதை புரிந்து கொள்ளமுடியும். வாயிலே இந்தி வார்த்தை நுழையாது என்று சொன்னுல் அது வேறு விஷயம். ஆனுல் இப்படிப்பட்ட கமான்ட் வார்த்தைகள் நாடு முழுமைக்கும்

11th March 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

ஒன்றாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் என் மனதில் சொல்ல நினைத்தது இன்ஸ்ட்ரக்ஷன் பற்றிதான் என்.ஸி.ஸி. உத்தியோகஸ்தர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது என்.ஸி.ஸி. யில் கொடுக்கின்ற இன்ஸ்ட்ரக்ஷனைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். இன்ஸ்ட்ரக்ஷன் இந்தியில் இருந்தது. இதை மாற்றி ஆங்கிலத்தில் இருக்கலாம் என்று சொன்னேன், அதோடு தமிழிலும் இருக்கலாம் என்று சொன்னேன். ஆங்கிலத்தில் இருப்பதால் பரவாயில்லை. ஆனால் தமிழிலும் இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கவேண்டும், தமிழிலேயே பயிற்சி சொல்லி கொடுக்க வேண்டும், தமிழிலேயே இன்ஸ்ட்ரக்ஷன் இருக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்குப் பதிலாக கமாண்ட் தமிழில் இருக்கும் என்று சொல்லிவிட்டேன். அது தவறு. இன்ஸ்ட்ரக்ஷன்தான் தமிழில் இருக்க வேண்டும் என்று சொல்ல நினைத்தது. அதற்காக இந்தத் திருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67——*cont.*

DEMAND NO. XII—POLICE.

THE HON. SRI P. KAKKAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 10,07,68,600 under Demand No. XII—Police.'

SRI K. A. MATHIALAGAN : Sir, to discuss about the misuse of the Defence of India Rules provisions against political leaders and newspapers depriving the fundamental rights and to stress the release of detenues under the Defence of India Rules and withdrawal of cases against newspapers, I move the following cut motion standing in my name—

"That the allotment of Rs. 10,07,68,600 under Demand No. XII—Police be reduced by Rs. 100."

MR. SPEAKER: I think no other Member is moving his cut motion. The Demand and the cut motion are before the House for discussion.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது 9-30 a.m.
மாநிலத்தின் போலீசின் பெருமையைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இந்த மன்றமும் அறியும், மக்களும் அறிவார்கள். சிறப்பு வாய்ந்த போலீஸ் இலாகா, நமது நாட்டுக்கு எப்போதெல்லாம் சோதனைகள் வந்தனவோ, அப்போதெல்லாம் சோதனைகளைத் தகர்த்தெறிந்து அப்புறப்படுத்த பெரும்பாடுபட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் மட்டுமல்ல. நமது பாரத நாட்டுக்கே பெரிய சோதனை வந்தபோது இங்கிருந்து நமது பட்டாளங்கள் அங்கு அனுப்பப் பட்டு, குறிப்பாக பஞ்சாப் மாநில எல்லையில் நமது நாட்டைப் பாதுகாப்பதில் சிறந்த பணி செய்தது. அது மட்டுமல்ல. இப்போதும், நாகாலாண்ட், அஸ்ஸாம் போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கும் நமது பட்டாளங்கள், பட்டாணியர்கள், சிறந்த முறையில் பணி செய்து வருகின்றன. அவர்களுடைய சேவையை